ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1979/19 - 2016 අගෝස්තු මස 08 වැනි සඳුදා - 2016.08.08

*1979/19 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாட்டுச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியானது, மேல் மாகாண மாநகர திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் ஹொரணை முதலீட்டு வலயம் உள்ளிட்ட நகர அபிவிருத்திப் பணிகளுக்காக உடனடியாகத் தேவைப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாதலால், குறிப்பிட்ட காணியானது தொடர்புடைய நோக்கத்திற்குத் தேவைப்படுகிறதென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2016, யூலை 30.*

***அட்டவணை***

*மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ஹொரணை பிரதேச செயலகப் பிரிவின் கோரளஇம மற்றும் ஒலபொடுவ வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சுமார் 43 ஹெக்டேயார் (106 ஏக்கர் 00 றூட் 34 பேர்ச்சஸ் ) அளவிலான ஒலபொடுவவத்த, நயாகொட வத்த, மீனேஹேன வத்த எனும் பெயரைக்கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணி உத்தியோகத்தர் திருமதி ஆர். சி. லியன ஆரச்சி அவர்களால் தயாரிக்கப்பட்ட 0006/2016 ஆம் இலக்க 2016.03.17 ஆந் திகதியைக் கொண்ட வரைபடத்தின் துண்டு A மற்றும் B என அடையாளமிட்டுக் காட்டப்பட்டுள்ள காணிக்குரிய எல்லைகள் பின்வருமாறு:-*

*வடக்கு : சமன்குமார மற்றும் ஏனையோர் உரிமைகோரும் கோரளஇம சொய்சா மாவத்தையில் இல. 213/2, 213/4 எனும் இடம், திறந்த தரிசுநிலம், நயாகொட வீதி, ஒலபொடுகந்த வீதி மற்றும் வயல் காணி.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*கிழக்கு :* ஒலபொடுகந்த வீதி, ஏ. விக்கிரமசிங்க மற்றும் ஏனையோர் உரிமைகோரும் ரோஸ்காடின் பாதையில் 260/41/S3, 260/41/A எனும் இடம், சனசமூக நிலையம், கைவிடப்பட்ட வயல் காணி மற்றும் திறந்த தரிசுநிலம், கே. பி. ஜயகொடி உரிமைகோரும் 211/1 ஆம் இலக்க இடம், உரிமையாளர் மற்றும் இலக்கம் தெரியாத வீடு மற்றும் வயல் காணி;

*தெற்கு :* சனசமூக நிலையம், கே. பி ஜயகொடி உரிமைகோரும் இல. 211/1 எனும் இடம், வயல் காணி மற்றும் திறந்த தரிசுநிலம், ஜே. எனிநோனா, எம். சமிந்த மற்றும் ஏனையோர் உரிமைகோரும் நயாகொட வத்த வீதியில் இல. 91/ B/10, 91/B/09, 91/ B/05, 91/B/04 எனும் இடம் மற்றும் ஹொரணை - கொழும்பு பிரதான வீதி ;

*மேற்கு :* நயாகொட வீதி, வயல் காணி, கைவிடப்பட்ட வயல் காணி மற்றும் திறந்த தரிசுநிலம், ஏ. கே. ஆரியவங்ச மற்றும் ஏனையோர் உரிமைகோரும் நாகஹகொட வத்த வீதியில் இல. 91/B/10, 91/ B/09, 91/B/05, 91/B/04 எனும் இடம் மற்றும் உரிமையாளர்கள் தெரியாத வெற்றுக்காணிகள், உரிமையாளர் மற்றும் இலக்கம் தெரியாத வீடு மற்றும் ஹொரணை - கொழும்பு பிரதான வீதி.

*8- 641*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.